DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.368/17

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name கிருஷ்ணசாமி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2019

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் பிசிபட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் ஆணைமலையான்பட்டி. என் மருமகன் முருகதாஸ் சாலை விபத்தில் இறந்துவிட்டதால் என் மகளுடன் பிசிபட்டியில் குடியிருக்கிறேன். என் மருமகன் கடந்த 14.8.17ல் சாலை விபத்தில் இறந்துவிட்டார். அதனால் நானும் என் மனைவியும் என் மகளுடன் வசித்து வருகிறோம். நான் வழக்கமாக காலையில் நடைபயிற்சிக்கு சென்றுவிடுவேன். அசா1 என் மனைவி அவர் வழக்கமாக வாசல் தொளித்து கோலம் போடுவார். கடந்த 14.8.17ல் நான் நடைபயிற்சிசை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் நகையை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டதாக என் மனைவி என்னிடம் சொன்னார். உடனேநானும் என் மனைவியும் பிசிபட்டி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். பின்னர் ஒரு வாரம் கழித்து போலிசார் எங்களை அழைத்து விசாரித்தார்கள். ஒரு வாரம் கழித்து என் மனைவி நீதிமன்றத்தில் வந்து நகையை பெற்றுக்கொண்டார்.

குறுக்கு விசாரணை:

புகார் கொடுக்கும் போது நானும் உடன் சென்றிருந்தேன். நகை பறித்து சென்றவரின் உருவமைப்பு இருசக்கரவாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது என்று நான் போலிச் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். நான் அசா1 என் மனைவி என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.